# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,

ஆணை எண்.332/பேரூ/2023

நாள். 23.12.2023

திரு.M.பாலசுப்ரமணியன்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அண்ணாமலைநகர் பேரூராட்சி,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் – எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலை நகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவரின் 23.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2023 அன்று பெறப்பட்டு, 332/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலை நகர், K.R.M. நகர், 8th.cross street என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.பாலசுப்ரமணியன் என்பவர் தனது 23.09.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

" அண்ணாமலை நகர் பேரூராட்சியில் நடைபெறும் ஊழல் முறைகேடுகளை தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் மூலம் நான் வெளிக்கொண்டு வருவதால் என்னை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என் மீது காவல்துறைக்கு பேரூராட்சியின் செயல் அதிகாரியும் தலைவர் பழனியும் நான் குற்றசெயலில் ஈடுபடாத போது பொய்யான புகார் அளித்து நான் சமூகபணி செய்வதை தடுத்து வருகின்றனர். பேரூராட்சியின் தலைவரும், பழனியும் என் மீது எண்ணற்ற

மொட்டை புகார்களை பொய்யான முகவரியில் அளித்து வருகின்றனர். இதனால் எனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுகிறது.

28.09.2023ல் என்னுடைய அனுமதியே இல்லாமல் எனது ஆட்டிற்காக வைத்திருந்த எனது பட்டாவில் உள்ள உயிர் மரங்களை EOவின் உத்தரவுப்படி தலைவர் பழனியும் அவரது சகாக்களும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வெட்டி உள்ளனர். மேலும் வெட்டிய மரக்கிளைகளை என்னிடம் கொடுக்காமல் பேரூராட்சி வண்டியில் ஏற்றி எடுத்து சென்று விட்டனர். எனது பட்டாவில் உள்ள உயிர்மரங்களை தலைவர் வெட்டுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. மேலும் இடையூறாக உள்ள மரங்களை வெட்ட வேண்டுமென்றால் வருவாய்துறையின் அனுமதி பெற்றபிறகே வெட்ட வேண்டும் என்ற விதிகளை மீறி வெட்டி எடுத்து சென்றுள்ளனர். எனவே இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அண்ணாமலை நகர் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.12.2023 நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) இம்முறை மன்றத்தில் மனுதாரர் 20.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி விசாரணைக்கு பின்னர் தனது வாக்குமூலத்தை சமர்ப்பிக்கவில்லை.

**5) அண்ணாமலை நகர் செயல் அலுவலர் தனது நாளிடப்படாத வாதுரையை பின்வருமாறு 20.12.2023 சமர்ப்பித்துள்ளார்:-**

" மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது உண்மைக்கு புறம்பான அம்சங்களுடன், சட்டத்திற்கு அப்பாற்பட்டும் அமைந்து காணப்படுகிறது. மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும். கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் அண்ணாமலை நகர் பேரூராட்சியானது கடந்த 04.04.1963ம் ஆண்டு முதல் முதல்நிலை பேரூராட்சியாக துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு 31.05.1994ம் வருடம் முதல் சிறப்புநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. புகழ்மிக்க சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் இப்பேரூராட்சியின் எல்லைக்குட்பட்டு அமைந்து பல மாணவி மாணாக்கர்களின் கல்வி திறன் மேம்பாடு அடைய பயன்பட்டு வருகிறது. பல சிறப்பு மிக்க பேரூராட்சி மன்றத் தலைவர்கள், செயல்திறன் மிக்க செயல் அலுவலர்கள் இப்பேரூராட்சியில் நன் முறையில் பணிபுரிந்து வந்துள்ளனர். இப்பேரூராட்சியின் மொத்த ஜனத்தொகை 16,500ம் 15 வார்டுகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. இப்பேரூராட்சியில் திறன்மிக்க செயல் அலுவலர், சுமார் 8 அலுவலக பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் 15 நபர்கள், திடக்கழிவு பணியாளர்கள், டெங்கு களப்பணியாளர்கள் மற்றும் குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மொத்தமாக 47 நபர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர். மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ளதுபோல் அவர் எவ்வித சமூகப்பணியும் பொதுமக்களுக்கு செய்வதில்லை. மற்றும் எவ்வித பொதுநலன் சார்ந்த செயற்பாட்டாளர் இல்லை. மாறாக மனுதாரர் அண்ணாமலை நகர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலவலர் மற்றும் பணியாளர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் புகார் மனுக்களை அனுப்பி உள்ளார். மேலும், இதன் அடிப்படையில் பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களை பொய்யான புகார்களை கூறி தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள நினைக்கிறார். மேலும், மனுதாரரின் அடிப்படை உரிமை நிலையை மீறி செயல்படும் வண்ணம் (Beyond the limit) எல்லாவிதமான பேரூராட்சியின்

பணிகளில் தலையிட்டு மனுதாரரை கண்டு எல்லோரும் பயப்பட வேண்டும் என்ற நோக்கிலும், அதிகார தோரணையில் தான் சொல்லும் சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயற்பாடுகளையும் செய்து தர வேண்டும் என்ற ஆணவ போக்கில் செயல்பட நினைக்கிறார்.

அண்ணாமலை நகர் சிறப்பு நிலை பேரூராட்சியின் KRM நகர் அமைந்துள்ள மேலவெளித்தெரு ரீ.சர்வே எண்.196/5பி – 0.61ல் மனுதாரரின் தந்தை மருதப்ப முதலியார் மனைப்பிரிவுகளாக பிரிவு செய்யப்பட்டு, மேற்கண்ட 0.61 சென்டில் அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள ரோட்டை பொது நன்மைக்காக (Public purpose) மனுதாரரின் தந்தை பேரூராட்சியிடம் தானமாக தானப்பத்திரம் மூலமாக கடந்த 01.09.2023ல் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி பத்திரத்தில் கண்ட ரோட்டை பொதுமக்கள் நன்மைக்காக சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்துக்கொள்ள வேண்டியது என வாசகம் மனுதாரர் தந்தையரால் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தமது புகார் மனுவில் 22.09.2023ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு ரோட்டிற்கு தென்புறம், வடபுறம் இருமருங்கிலும் காடு போன்று மண்டிக்கிடந்த காட்டுக்கருவை (Fire wood) முட்செடிகளை ரோட்டிற்கு இடையூறாக இருமருங்கிலும் தழைத்து, தாழ்ந்து பொதுமக்கள் ரோட்டை பயன்படுத்தா நிலையில் மிகவும் சீரடைந்து காணப்பட்ட நிலையில் அவர்கள் செயல் அலுவலருக்கு கொடுத்த புகார் மனுவின் அடிப்படையிலும், மின்வாரிய பணியாளர்கள் கோருதல் பேரிலும் கடந்த 25.08.2023ல் பேரூராட்சி செயல் அலுவலர் உத்தரவின் பேரில் பேரூராட்சி பணியாளர்கள் மேலவெளித்தெரு – 8 கிராஸ் ரோடு வடபுறம், தென்புறம் இருமருங்கிலும் அடர்ந்து தாழ்ந்து தழைந்து ரோட்டின் இருமங்கிலும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு லாயக்கற்ற நிலையில் இருந்த ரோட்டை சீர்படுத்தி உள்ளார்கள். மேலும், காட்டுக்கருவை முட்செடிகளை கழித்து இருபுறம் ஓரங்களில் இடையூறு செய்யாவண்ணம் ஒதுக்கீடு செய்து விட்டு சென்றனர்.

இவ்வாறு உள்ள நிலையில் மனுதாரர் புகார் மனுவில் 22.09.2023 ஏதோ மனுதாரர் பட்டாவில் உள்ள உயிர் மரங்களை வெட்டியதாக தவறான புகார் மனு தெரிவித்துள்ளார். காட்டுக்கருவை முட்செடிகள் (Fire wood) வகைப்பாட்டை சார்ந்தது ஆகும். மேலும் பொதுமக்கள் புகாரை தொடர்ந்து பேரூராட்சி பணியாளர்கள் ரோட்டை பொதுமக்கள் பயன்படுத்தும் வண்ணம் சீரமைத்து உள்ளனர். காட்டுக்கருவை (Fire Wood) முட்செடிகளை இடையூறாக உள்ள நிலையில் அவற்றை அப்புறப்படுத்த வருவாய் துறை அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. காட்டுக்கருவை முட்செடிகள் அனுமதியின்றி வெட்டக்கூடிய உயிர் மரவகையை சார்ந்தவை. மனுதாரர் புகார் மனுவில் தமது தாய் தந்தையரை பேரூராட்சி மன்ற தலைவர் பழனியும், அவரது கட்சியினரும் மிரட்டி சென்றதாக உண்மைக்கு மாறான அம்சத்தை சொல்லியுள்ளார். இதில் எள்ளளவும் உண்மையில்லை. மனுதாரர் தாயார் சிவகாமசுந்தரி கடந்த 15.07.2021 காலமாகிவிட்டார். சான்றாக விளக்கவுரையுடன் இறப்பு சான்று சமர்ப்பிக்கப்படுகிறது. இதிலிருந்தே மனுதாரரின் புகார் பொய்யுரை நிறைந்தது என முடிவுக்கு வர இயலும். மனுதாரர் புகார் மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி உகந்தது ஆகும்.

மனுதாரர் மனுவில் வெளிப்படையாக சொல்லியுள்ள அம்சங்களைத் தவிர்த்து இதர அம்சங்களை எதிர்மனுதாரர் மறுதளிக்கிறார். பின்னிட்டு எதிர்மனுதாரர்க்கு புகார் மனு சம்மந்தமாக ஏதும் கூடுதல் ஆவணங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையும் எதிர்மனுதாரர் நிலைநிறுத்திக்கொள்கிறார் ( reserve the rights to be filed the Additional written statement) . ஆகவே மேன்மைமிகு முறைமன்ற நடுவர் அவர்கள்

மனுதாரரின் தவறான புகார் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய இம் எதிர்மனுதாரர் பிரார்த்திக்கிறார்" என தெரிவித்துள்ளார்.

**7) அண்ணாமலை பேரூராட்சி செயல் அலுவலர் 20.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்: "**

நிலத்தில் உள்ள மரங்கள் பேரூராட்சி அலுவலர்களால் வெட்டப்பட்டு, மரத்தின் கிளைகள் மற்றும் மரத்துண்டுகள் பேரூராட்சியின் வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்பது முற்றிலும் தவறானதாகும். பேரூராட்சியின் மூலம் மனுதாரரின் இடத்தில் உள்ள எவ்வித மரத்தையும் பேரூராட்சியால் வெட்டப்படவில்லை. மாறாக மனுதாரர் இருப்பிடம் அருகே வடபுறம் மற்றும் தென்புறத்தில் மக்களுக்கு இடையூறாக மண்டிக்கிடந்த முட்செடிகள் அங்குள்ள சாலையை பயன்படுத்த இயலாக நிலையில் உள்ளதால் மின்வாரியத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதன் அடிப்படையில், மேற்கண்ட முட்செடிகள் அகற்றப்பட்டன" என தெரிவித்துள்ளார்.

**8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அண்ணாமலை நகர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் திரு. M. பாலசுப்ரமணியன் 28.09.2023ல் தன்னுடைய அனுமதியே இல்லாமல் எனது ஆடுகளுக்கு வைத்திருந்த எனது பட்டாவில் உள்ள உயிர் மரங்களை EOவின் உத்தரவுப்படி தலைவர் பழனியும் அவரது சகாக்களும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வெட்டி உள்ளனர். மேலும் வெட்டிய மரக்கிளைகளை என்னிடம் கொடுக்காமல் பேரூராட்சி வண்டியில் ஏற்றி எடுத்து சென்று விட்டனர். தனது பட்டாவில் உள்ள உயிர்மரங்களை தலைவர் வெட்டுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை. மேலும் இடையூறாக உள்ள மரங்களை வெட்ட வேண்டுமென்றால் வருவாய்துறையின் அனுமதி பெற்றபிறகே வெட்ட வேண்டும் என்ற விதிகளை மீறி வெட்டி எடுத்து சென்றுள்ளனர். எனவே இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

நிலத்தில் உள்ள மரங்கள் பேரூராட்சி அலுவலர்களால் வெட்டப்பட்டு, மரத்தின் கிளைகள் மற்றும் மரத்துண்டுகள் பேரூராட்சியின் வாகனத்தில் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்பது முற்றிலும் தவறானதாகும் என்றும் பேரூராட்சியின் மூலம் மனுதாரரின் இடத்தில் உள்ள எவ்வித மரத்தையும் பேரூராட்சியால் வெட்டப்படவில்லை எனவும் மாறாக மனுதாரர் இருப்பிடம் அருகே வடபுறம் மற்றும் தென்புறத்தில் மக்களுக்கு இடையூறாக மண்டிக்கிடந்த முட்செடிகள் அங்குள்ள சாலையை பயன்படுத்த இயலாக நிலையில் உள்ளதால் மின்வாரியத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதன் அடிப்படையில், மேற்கண்ட முட்செடிகள் அகற்றப்பட்டுள்ளது என்பதும் அண்ணாமலைநகர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் தனது பட்டா நிலத்தில் உள்ள மரங்களை பேரூராட்சியினர் வெட்டியதற்கான எவ்வித ஆதாரத்தையோ புகைப்படங்களையோ இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. பொதுமக்கள் புகாரை தொடர்ந்து பேரூராட்சி பணியாளர்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் காட்டுக்கருவை முட்செடிகளை அகற்றி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சீரமைத்துள்ளனர் என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது.

இந்நிலையில் மனுதாரரின் கோரிக்கை மனு மீது அண்ணாமலைநகர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மனுதாரர் 20.12.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு தனது வாக்குமூலத்தை சமர்ப்பிக்காமல் சென்றது இம்முறைமன்றத்தை அவமதித்தாகக் கருதி மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் இம்முறைமன்றத்தின் மாண்பையும் நேரத்தையும் விரயமாக்கிய கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, அண்ணாமலைநகர், K.R.M. நகர், 8வது குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு.M.பாலசுப்ரமணியம் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M.பாலசுப்ரமணியன்,
8th. Cross street, K.R.M.நகர்,
அண்ணாமலை நகர்,சிதரம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர் சிறப்பு நிலை பேரூராட்சி,
அண்ணாமலைநகர், சிதம்பரம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
எம்.ஆர்.சி. நகர்,ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்